**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ஆம் நாள்,**

**CC. 90/2017**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 10.04.2026-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. முத்து ஈஸ்வரன் ( ஆய்வாளர்) | வயது | : | 40 |
| த.பெ | : | திரு. சண்முகவேல் | நிலை | : | **PW-4 (Additional witness)** |

**Accused is present with counsel. Prosecution police is present.**

**கு.வி.மு.ச பிரிவு 311-ன்படி புவனகிரி காவல் நிலைய ஆய்வாளர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகியதன் பெயரில், நீதியின் நலன்கருதி, அவர் இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரிக்கு மாற்றாக சாட்சியம் அளிக்க அனுமதியளிக்கப்பட்டு அதன் பெயரில் சாட்சியம் அளிக்கிறார்.**

**சாட்சி முதல் விசாரனை -**

1) நான் தற்போது புவனகிரி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் ஞானேசேகரன் மற்றும் புலன் விசாரணை செய்த வட்ட ஆய்வாளர் இளவரசன் ஆகியோருடன் நான் பணிபுரிந்துள்ளதால் அவர்களது கையொப்பத்தை நன்கு அறிவேன். இந்த வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் அவர்களுக்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 27-01-2017-ஆம் தேதியன்று மாலை 19.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் ஞானேசேகரன் நிலைய பொறுப்பில் இருந்தபோது சீனிவாசன் (42) த.பெ. கிருஷ்ணன் என்பவர் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் புவனகிரி காவல் நிலைய குற்ற எண்.22/2017, இ.த.ச பிரிவுகள் 279,304(A)-ன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3-**ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சீனிவாசன் அளித்த புகார் மனு ஏற்கனவே அ.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**.**

2) பின்னர் ஆய்வாளர் திரு.இளவரசன் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மாலை 19.45 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் விஜயகுமார் மற்றும் வெற்றிவேல் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2- ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4-**ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சம்பவம் இடம் சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் இறந்துபோன ஆட்சியம்மாள் என்பவரின் பிரேதமானது சிதம்பரம் அரசு காமாராஜ் மருத்துவமனை சவக்கிடங்கில் இந்ததை பார்வையிட்டு அன்றைய தினமே இரவு 21.15 மணிமுதல் 23.15 மணிவரை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து, பிரேத பரிசோதனைக்காக அனுப்பியுள்ளார்.அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.5-**ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநரான ஆஜர் எதிரி ராமச்சந்திரன்(24) த.பெ செல்லக்கண்ணு என்பவரை 14-02-2017-ஆம் தேதி காலை 11.15 மணிக்கு நிலையத்தில் வைத்து கைது செய்தும் பின்பு தக்க இருநபர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

3) பின்பு இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய TN 61 J 7979 என்ற பேருந்தை 14-02-2017-ஆம் தேதி வாகன ஆய்வுக்காக சிதம்பரம் மோட்டார் வாகன ஆய்வாளர் முன்பாக ஆஜர்படுத்தப்பட்டது. திருமதி.விமலா சிதம்பரம் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் மேற்கண்ட விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஆய்வு செய்து சான்று வழங்கியுள்ளார். அன்றைய தினமே ஆய்வாளர் அவர்கள் மேற்கண்ட மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து ஏற்படுத்திய TN 61 J 7979 வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பெற்றுள்ளார். அந்த வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.6-**ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் பிரேத பரிசோதனை செய்த டாக்டர். மோகன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் மேலும் இவ்வழக்கு சம்பவத்தல் இறந்தவரின் பிரேத பரிசோதனை சான்றை பெற்றுள்ளார். அந்த பிரேத பரிசோதனை சான்றானது **அ.சா.ஆ.7-**ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் ஆய்வாளர் அவர்கள் புலன் விசாரணைமுடித்து சாட்சிகள் மற்றும் சாட்சிய, சான்றாவணங்கள் அடிப்படையில் 16-02-2017-ஆம் தேதி இறுதி அறிக்கை தயார் செய்து 30-05-2017-ஆம் தேதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி நான் இல்லை என்றாலும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் இந்தவழக்கின் புகார் பொய்யாக கொடுக்கப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்திலே வைத்து தயார் செய்யப்பட்து என்றாலும் அதன் அடிப்படையில் ஆவணங்களை அனுசரித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஓம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**